www.Padasalai.Net www.Trb Tnpsc.Com


# SAI K-10 SS T/M 24-25

## முக்கிய வினா–விடை தொகுப்பு

SAI K THIRUKUMARAN

# 10TH

# சமூக அறிவியல்

## (2024-2025 திருத்திய புதிய பதிப்பு)

முக்கிய வினா-விடை தொகுப்பு

SAI K

தயாரிப்பு;

SAI K.THIRUKUMARAN.
MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd...
BT - SOCIAL SCIENCE
GHS, MANALI NEW TOWN.
CHENNAI-103.
CELL NO :9865957299

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd.. BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

## வரலாறு – இரண்டு மதிப்பெண்
**(வினா எண் 15 முதல் 19 வரை)**

**1. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?**
1. உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி.
2. வேளாண் பொருட்கள் பாதிவிலையானது.
3. குத்தகை தொகை மாறவில்லை.

**2 . பதுங்குகுழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**
1. முதல் உலகப்போரில் அறிமுகம்.
2. போர் வீரர்கள் தங்களைப் பாதுகாக்கதோண்டிய குழிகள்.
3. குழிகள் மூலம் உணவு, ஆயுதம், வீரர்கள் வருவர்.

**3 . ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?**
1. வலிமையான சொற்பொழிவு மற்றும் உணர்ச்சிமிக்க பேச்சு.
2. ராணுவ புகழ் மிக்க காலத்திற்கு செல்வதாக கூறியது.

**4. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணி வகுப்பின் விளைவுகள் யாவை?**
1. 1922 அக்டோபரில், முசோலினி பாசிஸ்டுகளுடன் ரோமாபுரியை நோக்கி மாபெரும் அணிவகுப்பை நடத்தினார்.
2. முசோலினியின் வலிமையை கண்டு அரசர் அவரை ஆட்சி அமைக்க வரவேற்றார்.

**5 . லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை தொகுத்து எழுதவும்?**
1. அலி சகோதரர்கள் தொடங்கிய இயக்கம்.
2. இந்து–முஸ்லிம்கள் ஒன்று சேர வாய்ப்பு என காந்தியடிகள் ஆதரித்தார்.

**6 . ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?**
1. மறுசீரமைப்பு 2. சமய இயக்கம்
3. சமூக கொள்கை 4. மக்கள் கிளர்ச்சி

**7 . வாரிசு இழப்பு கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடுக.**
1. சதாரா 2. ஜான்சி 3. நாக்பூர்
4. சாம்பல்பூர் 5. பஞ்சாபின் சில பகுதிகள்

**8 . பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?**
1. வரிவசூல், 2. வழக்குகள் விசாரித்தல்,
3. நிலப்பகுதி நிர்வகித்தல், 4. சட்டம்–ஒழுங்கு பாதுகாத்தல்
5. காவல் காக்கும் கடமை

**9 . மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?**
1. இங்கிலாந்து, 2.பிரான்ஸ், 3.ரஷ்யா

**10 . முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?**
1. முழுமையான சுதந்திரம் பெறுவது.
2. டொமினியன் அந்தஸ்து இல்லாமல் சுயராஜ்யம் பெறுவது.

**11 . இந்தோ–சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**
1. வியட்நாம் வீரர்களின் ராணுவ புரட்சி ஒடுக்கப்பட்டது.
2. கம்யூனிஸ்ட்களின் விவசாய புரட்சி ஒடுக்கப்பட்டது,
3. 1000 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

**12. இந்திய விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது?**
1. அகில இந்திய அளவில் தன்னாட்சி.
2. புத்தகங்கள், செய்தித்தாள்கள் மூலம் தன் திட்டத்தை பரப்புதல்.

**13 . பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?**
1. உலகில் நிதிசார்ந்த ஒத்துழைப்பு
2. உலகில் வறுமை ஒழிப்பு
3. நிதிநிலை. பன்னாட்டு வணிகம்
4. வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி.

**14. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்?**
1. 1919 – ஏப்ரல் 13 ல் ஜெனரல் டயர் நடத்திய துப்பாக்கி சூடு
2. பலர் இறந்தனர், பலர் காயப்பட்டனர்.

**15 . திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் முக்கிய கூறுகளைத் தருக**
1. பிரிட்டிஷாருக்கு எதிரான முதல் அறை கூவல்.
2. தமிழக பாளையக்காரர்கள் ஒன்று திரண்டனர்.

**16 . ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்ப பெற்றார்?**
1. 1922 சௌரி சௌரா சம்பவம் வன்முறையாக மாறி காவல்நிலையம் தீயிடப்பட்டது.
2. இதனால் வேதனை அடைந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்ப பெற்றார்.

**17 . களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?**
திருவிதாங்கூவர் படைகள் மற்றும் புலித்தேவர் படைகள் ஒன்று சேர்ந்து களக்காடு போரில் மாபூஸ்கான் படையினை தோற்கடித்தன.

**18. பெரியாரை ஒரு பெண்ணியக்க வாதியாக மதிப்பிடுக.**
1. குழந்தை திருமணம், தேவதாசி முறை ஒழிப்பு.
2. பெண்கள் விவாகரத்து பெறுதல், சொத்துரிமை பங்கு ஆதரவு
3. தாய்மை பெருஞ்சுமை என கூறினார்.

**19 . கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக?**
**கிழக்கு** – சாத்தூர், நாகலாபுரம்,எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி,
**மேற்கு** – சேத்தூர், ஊத்துமலை, சிங்கம்பட்டி, நடுவக்குறிச்சி.

**20 . தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்?**
1. தன்னாட்சி தொகுதி (டொமினியன்)
2. வன்முறையாற்று அரசியல் சாசனம்.

**21 . முதல் உலகப்போருக்கு பிந்தைய உலகத்தில் மூன்று சர்வாதிகாரிகள் யாவர்?**
1. ஹிட்லர். 2. முசோலினி 3. பிராங்கோ.

**22 . பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை பட்டியலிடுக?**
1. சங்கத்திற்கென ராணுவம் இல்லை.
2. கூட்டு பாதுகாப்பு கோட்பாடு இல்லை.

**23 . மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக?**
1. இரண்டு வல்லரசுகளிலும் (ரஷ்யா,அமெரிக்கா) சேராத நாடுகள்
2. ரஷ்யா வீழ்ச்சிக்குப்பின் இதன் முக்கியத்துவம் குறைந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd.. BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

**24 . மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக?**
1. 1934–ல் 1 லட்சம் பொதுவுடைமை இராணுவ வீரர்களுடன் மாவோ தொடங்கிய பயணம்.
2. 20,000 பேர்மட்டும் 6000 மைல்கள் கடந்து ஷேனிப் பகுதியை அடைந்தனர்.

**25 . சீன–ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக?**
1. சீனாவை ஜப்பான் தோற்கடித்தது, ஐரோப்பிய சக்திகள் விரும்பவில்லை.
2. ஜப்பான் கிழக்கு ஆசியாவில் வலிமை பெற்றது.

**26 . ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**
1. இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று.
2. பிரான்ஸ் – அதிதீவிர நாட்டுப்பற்று.
3. ஜெர்மனி – வெறிகொண்ட நாட்டுப்பற்று.

**27 . தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக?**
1. ஆங்கிலேய பண்பாடு திணிப்பு தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்தை பாதித்தது.
2. இதன் விளைவாக சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

**28. பகத்சிங் பற்றி குறிப்பு வரைக?**
1. ஆங்கிலேயரை எதிர்க்க ஹிந்துஸ்தான் குடியரசு ராணுவத்தை மீண்டும் அமைத்தார்.
2. 1929 ல் மத்திய சட்டப்பேரவையில் புகைகுண்டு ஒன்றை பகத்சிங்கும், K.K தத்துவம் வீசினர்.
3. பகத்சிங் கைது செய்யப்பட்டு மரண தண்டனை பெற்றார்.

**29 . இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக?**
1. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு இரக்கம்.
2. அனைத்து மக்களுக்கும் இலவச உணவு.
3. ஜீவகாருண்யம்.
4. திருவருட்பா. (நூல்களின் தொகுப்பு).

**30 . பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?**
1. தனி தொகுதிகள் கொள்கை கைவிடல்.
2. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு.

**31 . கிலாபத் இயக்கம் – சிறு குறிப்பு வரைக?**
1. அலி சகோதரர்கள் தொடங்கிய இயக்கம்.
2. இந்து–முஸ்லீம் இணைய வாய்ப்பு ஏற்படும் என காந்தியடிகள் ஆதரித்தார்.

**32 . சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?**
1. இந்தியர்கள் எவரும் இல்லை.
2. அரசியல் சாசனத்தை நிர்ணயிக்கும் உரிமை தங்களுக்குஇல்லை என காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் சைமன் குழுவை புறக்கணித்தன.

**33 . கம்பெனியாருக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?**
1. பாளையங்களிடம் வரிவசூல் செய்யும் உரிமையை பெற்ற கம்பெனி ஆட்சியாளர்கள் பாளையக்காரர்களை அவமானபடுத்தியும், படைகளை வைத்தும் வரிவசூல் செய்தனர்.
2. இதுவே பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரரான கட்டபொம்மனுக்கும். கம்பெனிக்கும் இடையே சர்ச்சை ஏற்பட காரணமானது.

**34 .தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**
தமிழ் -- திராவிடன்.
ஆங்கிலம் -- ஜஸ்டிஸ்.
தெலுங்கு -- ஆந்திர பிரகாசிகா.

**35 . முத்து துறைமுக நிகழ்வை விவரி?**
1. 1941–ல் அமெரிக்க கடற்படை தளமான முத்து துறைமுகத்தை ஜப்பான் தாக்கிய நிகழ்வு.
2. கோபமுற்ற அமெரிக்கா, ஜப்பான் மீது போர் தொடுத்தது.

**36 . மார்ஷல் திட்டம் என்றால் என்ன?**
மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைக்க அமெரிக்கா பண உதவி அளித்தல்.

**37 . டாலர் ஏகாதிபத்தியம் தெளிவுபட விளக்குக?**
1. அமெரிக்கா தொலைதூர நாடுகளுக்கு பொருளாதார உதவிசெய்தல்.
2. பின்னர் ஆதிக்கம் செலுத்தி தக்கவைத்தல்.

**38 . திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.**
1. வேலை நிறுத்தம், விடுதலை பொதுக்கூட்டத்தினை வ.உ.சியும், சிவாவும் திருநெல்வேலியில் நடத்தினர்.
2. எனவே ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டதே திருநெல்வேலி எழுச்சியாகும்.

**39 . வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?**
1. ஆதாயம் இன்றி வளங்கள் தொடர்ந்து பரிமாற்றம் செய்வது.
2. இங்கிலாந்துக்கு இந்தியா மூலப்பொருள் பரிமாற்றம் செய்தது.

**40 . மகரிஷி தேவேந்திரநாத்தாகூர் முன்வைத்த நான்கு கூறுகளைக் குறிப்பிடுக?**
1. கடவுள் ஒருவரே,
2. அவரே ஞானம், சக்தி, நிலையானவர்.
3. வீடுபேறு கடவுளை சார்ந்தது.
4. கடவுளை நம்புதல்.

**41 . தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடுக?**
1. உ.வே.சா 2. திரு.வி.க. 3. மறைமலையடிகள்
4. பாரதியார் 5. தாமோதரனார் 6. பரிதிமாற்கலைஞர்

**42 . பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?**
1. சதி, பலதார திருமண ஒழிப்பு.
2. குழந்தை திருமணம் எதிர்ப்பு
3. விதவை மறுமணம் ஊக்குவிப்பு.

**43. நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்து சமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்?**
1. 1926–ல் நிறைவேறிய இச்சட்டம் எந்த ஒரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில் நிர்வாக குழுவில் உறுப்பினராகவும், கோயில் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.
2. இதனால் உயர்சாதியினரால் சுரண்டப்பட்ட கோயில் சொத்துக்கள், பொது சொத்துக்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## புவியியல் – இரண்டு மதிப்பெண்

**(வினா எண் 20 முதல் 23 வரை)**

**1 . தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக?**

வடக்கு – ஆந்திரா,
மேற்கு – கேரளா,
வடமேற்கு – கர்நாடகா,
கிழக்கு – வங்காள விரிகுடா,
தெற்கு – இந்தியப் பெருங்கடல்.

**2 . வேளாண்மை வரையறுக்கவும்?**

1. குறிப்பிட்ட பயிரை உற்பத்தி செய்தல்.
2. மக்கள் மற்றும் கால்நடைகளுக்கு உணவு வழங்குதல்.
3. நாட்டிற்கு 25% வருமானம், 50% வேலைவாய்ப்புதருவது.

**3 . தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக?**

1. மேட்டூர் அணை 2. பவானிசாகர் அணை
3. அமராவதி அணை 4. சாத்தனூர் அணை
5. பாபநாசம் அணை

**4 . இந்தியாவில் அதிக மழைபெறும் பகுதிகள் யாவை?**

1. அசாம், 2. திரிபுரா, 3. நாகலாந்து.
4. தெற்கு மேகாலயா, 5. மேற்கு கடற்கரை.

**5 . பேரிடர் அபாய நேர்வு–வரையறு?**

ஐ.நாவின் UNDRR கூற்றின் படி, பேரிடருக்கான காரணங்களை முறையாகக் கண்டறிந்து பேரிடரின் போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.

**6 . பன்னாட்டு வணிகம் – வரையறு?**

1. இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளிடையே நடைபெறும் வணிகம்.
2. இரு கூறுகள் – ஏற்றுமதி, இறக்குமதி.
3. நீர்வழி, வான்வழி.
4. அயல்நாட்டு பணம் பயன்பாடு.

**7. கோயம்புத்தூர் ஏன் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?**

கோயம்புத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான பருத்தி நெசவாலைகள் அமைந்துள்ளதால் கோயம்புத்தூர் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது.

**8 . இயற்கை எரிவாயு என்றால் என்ன?**

1. பூமிக்கடியில் கிடைக்கும் ஒரு வாயு.
2. நீர்ம கரிம வாயு.
3. பெட்ரோலியத்துடன் இருக்கும்,
4. பெரும்பகுதி மீத்தேன்.

**9 . வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?**

1. புவிப்பரப்பில் இருந்து உயரே செல்ல செல்ல வெப்ப நிலை குறைவது.
2. 1000 மீட்டருக்கு 6.5°C வெப்பநிலை குறையும்.
3. எனவே சமவெளியினை விட மலைப்பகுதி குளிராக உள்ளது.

**10 . இந்திய வேளாண் பருவங்களை குறிப்பிடுக?**

1. காரிஃப் ( ஜீன் – செப்டம்பர் )
2. ராபி ( அக்டோபர் – மார்ச் )
3. சையது ( ஏப்ரல் – ஜீன் )

**11 . இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி கூறுக?**

1. இந்தியாவின் மேற்கில் உள்ளது.
2. முருகைப் பாறைகள்
3. தலைநகரம் – காவராத்தி
4. பரப்பளவு – 32 ச.கி.மீ.

**12 . இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக?**

1. 82° 30' கிழக்கு தீர்க்க ரேகையின் தலநேரம்.
2. மிர்சாபூர் வழியாக செல்கிறது.
3. கிரின் வீச்சை விட 5.30 மணி நேரம் முன்னர்.

**13 . தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகள் யாவை?**

1. காரையாறு. 2. சேர்வலாறு.
3. மணிமுத்தாறு. 4. பச்சை ஆறு.

**14 . புயலின் போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?**

1. கைபேசி, வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மூலம் மீனவர்களை எச்சரிக்கிறது.
2. மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்தும், படகுகளை பாதுகாக்கவும் கூறுகிறது.

**15 . தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

1. தகவல், எண்ணம், கருத்து பரிமாற்றம்.
2. **இருவகை** : 1. தனிமனித, 2. பொது.

**16 . இந்தியாவில் மேற்குநோக்கி பாயும் ஆறுகளைப் பற்றிக் கூறுக?**

1. நர்மதை, 2. தபதி, 3. மாஹி, 4. சபர்மதி.

**17. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக?**

1. குளிர்காலம் – ஜனவரி – பிப்ரவரி.
2. கோடைகாலம் – மார்ச் – மே.
3. தென்மேற்கு பருவக்காற்று காலம் – ஜீன் – செப்டம்பர்.
4. வடகிழக்கு பருவக்காற்று காலம் – அக்டோபர்–டிசம்பர்.

**18 . நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக?**

1. ஆந்திரசைட் – 80–90%
2. பிட்மினஸ் – 60–80%
3. பழுப்பு நிலக்கரி – 40–60%
4. மரக்கரி – 40% க்கு குறைவு.

**19 . இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்திப் பகுதிகளைக் குறிப்பிடுக?**

**1. மேற்கு கடற்கரைக்கு அருகில் ;**

1. மும்பை ஹை 2. குஜராத் கடற்கரை 3. காம்பே.

**2. கிழக்கு கடற்கரைக்கு அருகில் ;**

1. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு 2. திக்பாய்
3. அந்தமான்–நிக்கோபார்.

**20 . தமிழ்நாட்டின் முக்கியத் தீவுகளை குறிப்பிடுக?**

1. பாம்பன். 2. முயல்தீவு, 3. தீவுத்திடல்,
4. ஸ்ரீரங்கம், 5. நல்லதண்ணி தீவு,
6. உப்புதண்ணித் தீவு, 7. புள்ளிவாசல்.

**21 . ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?**

1. வளிமண்டல உயர் அடுக்கில் குறுகிய பகுதியில் வேகமாக நகரும் காற்றுகள்.
2. இவை தென்மேற்கு பருவக்காற்று, வெப்பமண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

SAIK

**22 . இந்தியாவில் உள்ள உயிர்கோள பெட்டகங்களில் ஏதேனும் ஐந்தினை எழுதுக?**

1. நீலகிரி 2. கட்ச் 3. பன்னா 4. சுந்தரவனம்
5. அகஸ்தியர் மலை 6. மன்னார் வளைகுடா

**23 . இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக?**

1. தீவிர வேளாண்மை,
2. படிக்கட்டு வேளாண்மை
3. இடப்பெயர்வு வேளாண்மை,
4. தன்னிறைவு வேளாண்மை,
5. கலப்பு வேளாண்மை,
6. வறண்ட வேளாண்மை.

**24 . நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு வரைக.**

1. எண்ணெய், இயற்கை எரிவாயு வயல்களையும் சந்தை பகுதிகளோடு இணைக்கும் எளிதான மற்றும் சிறந்த போக்குவரத்தாகும்.
2. குழாய் அமைக்க ஆரம்பகால செலவு அதிகம், பராமரிப்பு செலவு குறைவு.

**25 . மண் வரையறு?**

1. கனிமங்களின் கூட்டு, மக்கிய தாவர, விலங்கினப் பொருட்கள் மற்றும் காற்று, நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது.
2. புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

**26 . சாலை போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக?**

1. குறுகிய பயணத்திற்கு ஏற்றது.
2. எல்லா மக்களும் பயன்படுத்தலாம்
3. பராமரிப்பு செலவு எளிது.

**27 . இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக?**

1. உயரமான மலை சரிவுகளில் பயிரிடப்படுவது.
2. (எ.கா) தேயிலை, காபி, இரப்பர், வாசனைப்பொருள்.

**28 . இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக?**

1. மேற்கு வங்கம் ஹுக்ளி ஆற்றங்கரை.
2. டிட்டகார், பட்ஜ்–பட்ஜ், ஹவுரா.
3. ஆந்திரா, சத்தீஸ்கர், பீகார், அசாம், ஒடிசா.

**29. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?**

1. இத்திட்டம் சென்னையிலும், புறநகரிலும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.
2. மே 2017 முதல் மெட்ரோ இரயில் அமைப்பும், பாதாள இரயில் போக்குவரத்துடன் விரிவு செய்துள்ளது.

**30. தக்காண பீடபூமி குறிப்பு வரைக?**

1. தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ளது.
2. முக்கோண வடிவம் கொண்டது.
3. இதன் பரப்பளவு சுமார் 7 லட்சம் சதுர கி.மீ.
4. இதன் உயரம் சுமார் 500 மீ முதல் 1000 மீ வரை.

**31 . வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக?**

1. இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்தும்.
   (எ.கா) நீர், மண், காற்று
2. **வகைகள்** : 1. புதுப்பிக்க இயலும் வளங்கள்
   2. புதுப்பிக்க இயலா வளங்கள்

**32 . கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?**

1. ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்டவை.
2. உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள்
3. **வகைகள்:** 1. உலோகம் 2. அலோகம்

**33 . தேரி என்றால் என்ன?**

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரை ஓரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள்.

**34. இடம் பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

1. ஒரு பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்வது.
2. **வகைகள்:** 1. உள்நாட்டு, 2. சர்வதேச.

**35 . தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்களை எழுதுக.**

1. சொர்ணவாரி (சித்திரை பட்டம்)
2. சம்பா (ஆடிபட்டம்)
3. நவரை

**36 . பருவ மழை வெடிப்பு என்றால் என்ன?**

1. தென்மேற்கு பருவக்காற்று இடிமின்னலுடன் தொடங்குவது.
2. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.

**37 . மெக்னீசியத்தின் (மாங்கனீசு) பயன்களைக் குறிப்பிடுக?**

1. வெளுக்கும் தூள், 2. பூச்சிக்கொல்லி,
3. வண்ணப்பூச்சு 4. மின்கலன்கள் தயாரிக்க பயன்படுகிறது.

**38 . கடற்கரை சமவெளி எவ்வாறு உருவாகிறது?**

1. இச்சமவெளி கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாகிறது.
2. சில இடங்களில் 80 கி.மீ அதிகமான அகலத்துடன் காணப்படுகிறது.

**39 . கலப்பு வேளாண்மை என்றால் என்ன?**

1. வேளாண்மையுடன் கால்நடை, கோழி, தேனீ வளர்ப்பு, மீன் பிடித்தல்.
2. விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்கிறது.

**40. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறுகுறிப்பு வரைக?**

1. மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுவது.
2. மண்ணரிப்பை தடுக்கிறது.

**41 . வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

1. இயற்கை 2. அமைப்புசார்
3. உட்கட்டமைப்பு 4. தொழில்நுட்ப

**42 . இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை?**

1. அச்சங்கள் 2.கடலில் இருந்து தொலைவு
3. நிலத்தோற்றம் 4. பருவக்காற்று 5.ஜெட் காற்று.

**43 . கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக?**

1. ஈரத்தில் சேறாக இருக்கும்.
2. ஈரத்தை நீண்ட நேரம் தக்க வைக்கும்.
3. பசால்ட் பாறைகளால் உருவானது.

## குடிமையியல் – இரண்டு மதிப்பெண்கள்

**(வினா எண் 24 முதல் 26 வரை)**

**1. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை?**

1. தமிழ், (2004) 2. சமஸ்கிருதம், (2005)
3. கன்னடம், (2008) 4. தெலுங்கு, (2008)
5. மலையாளம், (2013) 6. ஒடியா. (2014)

**2. பிரிக்ஸ் ( BRICS ) உறுப்பு நாடுகளின் பெயரைக் குறிப்பிடுக?**

1. B – பிரேசில் 2. R – ரஷ்யா 3. I – இந்தியா
4. C –சீனா 5. S – சவுத் ஆப்பிரிக்கா.

**3 . உச்சநீதிமன்ற நீதிபதியாவதற்கு தகுதிகள் யாவை?**

1. இந்திய குடிமகன்.
2. 5 ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதி.
3. 10 ஆண்டுகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்.
4. சிறந்த சட்டவல்லுநர்.

**4 . சார்க் உறுப்பு நாடுகளில் பட்டியலிடுக?** ( PAIN MBBS)

P–பாகிஸ்தான், A–ஆப்கானிஸ்தான், I–இந்தியா, N–நேபாளம், M–மாலத்தீவுகள், B–பூட்டான், B–பங்களாதேஷ், S–ஸ்ரீலங்கா.

**5 . பஞ்சசீலக் கொள்கைகளைப் பட்டியலிடுக?**

1. நாட்டின் இறையாண்மை, எல்லைமீது பரஸ்பர மதிப்பு.
2. பரஸ்பர ஆக்கிரமின்மை.
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமை.
4. பரஸ்பர நலனுக்கு சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பு.
5. பரஸ்பர அமைதி.

**6 . உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?**

1. மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்.
2. முக்கிய வழக்குகளை நேரடியாக விசாரித்தல். (உயில், திருமணம், நீதிமன்ற அவமதிப்பு).

**7 . இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக?**

1. சமத்துவ உரிமை.
2. சுதந்திர உரிமை.
3. சுரண்டலுக்கெதிரான உரிமை.
4. சமயசார்பு உரிமை.
5. கல்வி மற்றும் கலாச்சார உரிமை.
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு உரிமை.

**8. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு தகுதிகள் யாவை?**

1. 35 வயது நிரம்பிய, இந்தியக்குடிமகன்.
2. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது.

**9. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக?**

1. உடன்படிக்கை 2. ஒப்பந்தங்கள்
3. தூதுவர் நியமனம் 4. வெளிநாட்டு உதவி,
5. சர்வதேச வணிகம் 6. ஆயுத படை.

**10. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?**

1. கேபினெட் அமைச்சர்கள்.
2. இராஜாங்க அமைச்சர்கள்.
3. துணை அமைச்சர்கள்.

**11. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?**

1. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர்
2. மாநில நிர்வாகத்தின் எல்லா அதிகாரங்களும் பெற்றவர்.

**12. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?**

1. சிட்டிசன் எனும் ஆங்கில சொல் சிவிஸ் எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டது.
2. இதன் பொருள் நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்

**13 .தேசிய அவசர நிலை என்றால் என்ன?**

உள்நாட்டு அவசர நிலை காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டம் 352–ன் கீழ் அசவர நிலையை பிறப்பிப்பது தேசிய அவசர நிலை ஆகும்.

**14. நிதி மசோதா என்றால் என்ன?**

1. வருமானம் மற்றும் செலவு சார்ந்த மசோதா.
2. புதிய வரிவிதிப்பு, வரி குறைப்பு, வரிநீக்கம் இதில் அடங்கும்.

**15. நீதிப்பேராணை என்றால் என்ன?**

1. நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை (அ) ஆணை.
2. சில சட்டங்களை நிறைவேறாமல் தடுக்க நீதிமன்றத்தினால் வெளியிடப்படும் ஆணை.

**16. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி?**

1. படைவலிமை குறைப்பை வலியுறுத்தி வருகிறது.
2. முதலில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை.
3. ஐ.நாவின் திட்டத்திற்கு இந்தியா ஆதரவு.
4. அணு ஆயுதத்தை தாக்குதலுக்கு பயன்படுவதில்லை.

**17 . சபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக?**

1. இந்தியா–ஆப்கானிஸ்தான்–ஈரான்– முக்கூட்டு ஒப்பந்தம்.
2. சாபஹார் துறைமுகத்தில் மூன்று நாடுகளும் போக்குவரத்து வழிகள் ஏற்படுத்துதல்.

**18 . இந்தியக்குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்?**

1. ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால்.
2. இவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை கூறுக?**

1. சீனா 2.இலங்கை 3.பாகிஸ்தான்
4. ஆப்கானிஸ்தான் 5. நேபாளம் 6.பூட்டான்
7.வங்காளதேசம் 8.மியான்மர்.

**20 . 'கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம்' பற்றி நீவிர் அறிவது என்ன?**

1. இந்தியா உருவாக்கிய போக்குவரத்துத் திட்டம்.
2. கொல்கத்தா – சிட்வே இணைப்பு சரக்கு போக்குவரத்து திட்டம்.

**21. அணிசேரா இயக்கத்தின் நிறுவன தலைவர்கள் யாவர்?**

1. நேரு 2. நாசர் 3. டிட்டோ 4. சுகர்னோ 5. நுக்ருமா.

**22. அரசியலமைப்பு என்றால் என்ன?**

1. நாட்டு முன்னேற்றத்தின் அச்சாணி.
2. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரத்தை கூறுவது.
3. நாட்டின் நிர்வாகக் கொள்கைகளை பிரதிபலிக்கும் சட்டம்.

**23. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகலாவிய குழுக்களை பட்டியடுக.**

1. பிரிக்ஸ் 2. ஐ.நா.சபை 3. சார்க்
4. G–20 5. அணிசேரா இயக்கம் 6. IBSA.

**24. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை சிறுகுறிப்பு வரைக?**

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது பணியை சம்மந்தப்பட்ட துறையில் நிறைவேற்றுதல்.

SAI K

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd.. BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

## பொருளியல் – இரண்டு மதிப்பெண்கள்

**(வினா எண் 26 முதல் 28 வரை)**

**1. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பொருள் என்ன?**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் (ம) பணிகளின் மொத்த மதிப்பு.

**2. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக?**

1. மதிய உணவுத்திட்டம் மற்றும் ICDS.
2. Dr. MGR ஊட்டச்சத்து திட்டம்.
3. பிரதமரின் கிராமோதயா திட்டம்.
4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

**3. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) –சிறுகுறிப்பு வரைக.**

1. இது மறைமுக வரிகளில் ஒன்று.
2. குறிக்கோள்: ஒரு நாடு–ஒரு அங்காடி–ஒரு வரி ஆகும்.
3. ஜீலை 1–2017 முதல் நம் நாட்டில் நடைமுறையில் உள்ளது.

**4. GDP இன் முக்கியத்துவத்தை எழுதுக?**

1. பொருளாதார வளர்ச்சி பற்றிய.
2. பொருளாதார திட்டமிட.
3. வாங்கும் திறன் மதிப்பிட.
4. பணவீக்க, பணவாட்ட சிக்கல் தீர்க்க.

**5. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?**

1. உணவு கிடைத்தல்.
2. உணவுக்காக அணுகல்.
3. உணவினை உறிஞ்சுதல்.

**6. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?**

1. நோக்கம் :
நிறுவனங்களிடையே பரஸ்பர தொடர்பு ஏற்படுத்துவது.
2. வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்கள் தங்களின் தேவைகளான சந்தைகள். தொழில் நுட்பங்கள், திறன்களை பகிர்வதே தொழில்முறை தொகுப்பாகும்.

**7. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?**

1. திரவக்கழிவுகளால் சுகாதாரம், நீர்நிலைகள், விவசாயம் பாதிப்பு,
2. முதன்மை தொழில் நுட்பத்தால் வேலைவாய்ப்பு குறைவு.

**8. GDP ல் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

1. முதன்மை துறை – விவசாயம்
2. இரண்டாம் துறை – தொழில்
3. மூன்றாம்துறை – பணிகள்

**9. வளர் வீத வரி என்றால் என்ன?**

1. வருமானம் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிப்பது வளர் வீத வரி ஆகும்.
2. இம்முறையில் வரியின் அடிப்படைத் தளம் இம்முறையில் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிக்கும்.

**10. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?**

வரி செலுத்துவதன் மூலம் அரசு அந்த நிதியிலிருந்து பல செயல்களை நிறைவேற்றுகிறது.

(எ.கா) 1.பொருளாதார உள்கட்டமைப்பு செலவுகள் 2. இராணுவம் 3. அறிவியல் ஆராய்ச்சி 4. கலாச்சாரம் & கலைகள் 5. பொதுப்பணிகள் & பொதுக்காப்பீடுகள்.

**11. நாட்டு வருமானம் வரையறுக்க?**

ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**12. தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்றால் என்ன?**

நாட்டு வருமானத்தை மக்கள்தொகையால் வகுப்பதால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

**13. பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?**

1. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு (அரிசி, கோதுமை)
2. முக்கிய தானிய பயிர்களின் விளைச்சல் அதிகரிப்பு.
3. தானிய உற்பத்தியால் நிலப்பரப்பு அதிகரிப்பு.

**14. FAO–வின் படி உணவு பாதுகாப்பை வரையறு?**

எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வது.

**15. உலகமயமாக்கல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

1. உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பது.
2. வகைகள்: 1.தொன்மையான 2. இடைப்பட்ட 3. நவீன.

**16. வரி வரையறுத்து, அதன் வகைகளை கூறுக?**

1. எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி அரசுக்கு செலுத்தும் கட்டாய கட்டணம்.
2. வகைகள் : 1. நேர்முக வரி, 2. மறைமுக வரி.

**17. கருப்பு பணம் என்றால் என்ன?**

1. கருப்பு சந்தையில் ஈடுபட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரி பணமே கருப்பு பணமாகும்.
2. வரி நிர்வாகத்திடம் மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் கருப்புப் பணம் ஆகும்.

**18. தொழில் முனைவோர் என்றால் என்ன?**

1. புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் தொழில் முனைவோர் ஆவார்.
2. சிறந்த நிர்வாகத்திறன், வலிமையான குழுவை அமைக்கும் திறமை, தேவையான தலைமை பண்புகளை கொண்டவர்.

**19. உலகமயமாக்கலின் நேர்மையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக**

1. வாழ்க்கை தரம் அதிகரிப்பு
2. வேலைவாய்ப்பு அதிகரிப்பு
3. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு
4. வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிப்பு.

**20. தொழில் முனைவு என்றால் என்ன?**

1.தொழில் முனைவோர் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகள்.

2. ஒன்றை உருவாக்கி வெளிப்படுத்தும் திறன்.

**21. வரி ஏய்ப்பு என்றால் என்ன?**

தனிநபர்கள் நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு.

(எ.கா.) 1. வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்,
2. மறைக்கப்பட்ட பணம் ஆகும்.

**22. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?**

பல நாடுகளில் நிறுவனங்களை தொடங்கி நடத்துவது.

(எ.கா) பெப்சி, TVS, SBI

**23. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?**

1. வர்த்தகத்தில் நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும்
2. எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்தல்.

**24. மதிப்பு கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறுக்கவும்?**

பால் + சர்க்கரை + டீத்தூள் = தேனீர்

இடைநிலை பண்டங்கள் = இறுதி பண்டங்கள்.

**25. இந்தியாவில் பொருளாதார கொள்கைகளின் பெயர்களை எழுதுக?**

1. வேளாண்மை 2. தொழில்துறை,
3. புதிய பொருளாதார கொள்கை 4. வர்த்தகம்,
5. வேலை வாய்ப்பு. 6. கூலிக் கொள்கை.

**26. நிறுவன வரி என்றால் என்ன?**

1. தங்கள் பங்குதாரர்களிடம் இருந்து தனி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுவது.
2. வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd... BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

## புவியியல் – வேறுபடுத்துக.

### வினா எண் 34 (அ).

| 1. மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| 1. தொடர்ச்சியான மலைகள்<br>2. மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது<br>3. உயரமான சிகரம் – ஆனைமுடி | 1. தொடர்ச்சியற்ற மலைகள்<br>2. கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது<br>3. உயரமான சிகரம் – மகேந்திரகிரி |

| 2. மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|
| 1. குறுகலான சமவெளி<br>2. வேம்பநாடு முக்கிய ஏரி<br>3. கொங்கன, மலபார் கடற்கரை<br>4. கட்ச் முதல் கன்னியாகுமரி வரை உள்ளது. | 1. அகலமான சமவெளி<br>2. சில்கா முக்கிய ஏரி<br>3. வடசர்கார், சோழமண்டல கடற்கரை<br>4. மேற்கு வங்கம் முதல் கன்னியாக்குமரி வரை உள்ளது. |

| 3. வடகிழக்கு பருவக்காற்று | தென்மேற்கு பருவக்காற்று |
|---|---|
| 1. அக்டோபர் முதல் நவம்பர்(டிசம்பர்)<br>2. நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது.<br>3. இந்தியா 35% மழைப்பொழிவை பெறுகிறது<br>4. தென் இந்தியாவில் அதிக மழை. | 1. ஜீன் முதல் செப்டம்பர்.<br>2. கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது.<br>3. இந்தியா 75% மழைப்பொழிவை பெறுகிறது.<br>4. வட இந்தியாவில் அதிக மழை. |

| 4. புதுபிக்க இயலும் வளங்கள் | புதுபிக்க இயலாத வளங்கள் |
|---|---|
| 1. புதுபிக்க இயலும்<br>2. சுற்றுச்சூழலை பாதிக்காது<br>3. ஆற்றல் வளம் குறையாது<br>4. சூரியன், காற்று, உயிர்வளம் | 1. புதுபிக்க இயலாது<br>2. சுற்றுச்சூழலை பாதிக்கும்<br>3. ஆற்றல் வளம் குறையும்<br>4. நிலக்கரி, பெட்ரோல், இயற்கை வாயு |

| 5. வானிலை | காலநிலை |
|---|---|
| 1. தினமும் மாறும்<br>2. இடத்திற்கு இடம் மாறுபடும்<br>3. குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டல தன்மை. | 1. மாறாதது (பருவத்திற்கு மாறும்)<br>2. மாறுபாடு இருக்காது.<br>3. குறிப்பிட்ட இடத்தின் 35ஆண்டு வானிலை சராசரி. |

| 6. கடல் மீன் பிடித்தல் | உள்நாட்டு மீன் பிடித்தல் |
|---|---|
| 1. கடற்கரை, ஆழ்கடல் மீன் பிடித்தல்<br>2. உவர்ப்பு நீரில் நடைபெறும்.<br>3. கேரளா முதலிடம்.<br>4. பெரிய மற்றும் இயந்திர படகுகள் மூலம் மீன் பிடித்தல் | 1. ஏரிகள், ஆறுகள், குளங்களில் மீன் பிடித்தல்<br>2. நன்னீரில் நடைபெறும்<br>3. ஆந்திரா முதலிடம்.<br>4. கட்டுமரம், டீசல் படகுகள், மீன் வலைகள் மூலம் மீன் பிடித்தல் |

| 7. சாலை வழி போக்குவரத்து | இரயில் வழி போக்குவரத்து |
|---|---|
| 1. குறைந்த அளவு பயணிகள், சரக்குகளை எடுத்துச் செல்லும்.<br>2. குறுகிய தூர பயணம்<br>3. கிராமங்களை இணைக்கும்<br>4. தார் சாலையில் பயணம் | 1. அதிக அளவு பயணிகள் மற்றும் சரக்குகளை எடுத்துச் செல்லும்<br>2. நீண்ட தூர பயணம்<br>3. பெருநகரங்களை இணைக்கும்.<br>4. இருப்பு பாதையில் பயணம் |

| 8. உலோக கனிமங்கள் | அலோக கனிமங்கள் |
|---|---|
| 1. ஒன்றுக்கு மேற்பட்ட உலோகங்க<br>2. தங்கம், தாமிரம், நிக்கல், இரும்பு.<br>3. மதிப்புமிக்க உலோகங்கள் | 1. இவை உலோக தன்மையற்றவை.<br>2. மைக்கா, ஜிப்சம், நிலக்கரி, பெட்ரோல்.<br>3. எளிதாக செயற்கையாக கிடைக்கிறது. |

| 9 நீர் வழி போக்குவரத்து | வான் வழி போக்குவரத்து |
|---|---|
| 1. பழமையான மற்றும் மலிவான போக்குவரத்து.<br>2. மெதுவானது.<br>3. விலை குறைந்தது.<br>4. சுற்றுச் சூழலை பாதிக்காது. | 1. நவீன மற்றும் அதிக செலவு மிகுந்த போக்குவரத்து.<br>2. விரைவானது.<br>3. விலை உயர்ந்தது.<br>4. சுற்றுச் சூழலை பாதிக்கும். |


| 9. நீர் வழி போக்குவரத்து | வான் வழி போக்குவரத்து |
|---|---|
| 1. பழமையான மற்றும் மலிவான போக்குவரத்து.<br>2. மெதுவானது.<br>3. விலை குறைந்தது.<br>4. சுற்றுச் சூழலை பாதிக்காது. | 1. நவீன மற்றும் அதிக செலவு மிகுந்த போக்குவரத்து.<br>2. விரைவானது.<br>3. விலை உயர்ந்தது.<br>4. சுற்றுச் சூழலை பாதிக்கும். |


| 10. சாலை வழி போக்குவரத்து | இரயில் வழி போக்குவரத்து |
|---|---|
| 1. குறைந்த அளவு பயணிகள், சரக்குகளை எடுத்துச் செல்லும்.<br>2. குறுகிய தூர பயணம்<br>3. கிராமங்களை இணைக்கும்<br>4. தார் சாலையில் பயணம் | 1. அதிக அளவு பயணிகள் மற்றும் சரக்குகளை எடுத்துச் செல்லும்<br>2. நீண்ட தூர பயணம்<br>3. பெருநகரங்களை இணைக்கும்.<br>4. இருப்பு பாதையில் பயணம் |

| 11. உணவுப் பயிர்கள் | வாணிபப் பயிர்கள் |
|---|---|
| 1. மனித தேவைக்கா பயிரிடப்படுவது.<br>2. நெல், தினை, தானியங்கள்.<br>3. மதுரை, திருநெல்வேலி, காவிரி டெல்டா, இராமநாதபுரம். | 1. இலாப நோக்கோடு விற்பனைக்கு பயிரிடப்படுவது.<br>2. கரும்பு, சணல், பருத்தி.<br>3. மதுரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், விருதுநகர், |

| 12. தாமிரபரணி | காவேரி |
|---|---|
| 1. மேற்குத் தொடர்ச்சி மலையின் பொதிகை மலை முகடுகளில் தோன்றுகிறது.<br>2. துணை ஆறுகள் ; காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு, சித்தாறு.<br>3. திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களை கடந்து வங்கக்கடலில் கலக்கிறது. | 1. மேற்குத் தொடர்ச்சி மலையில் தலைக்காவிரி என்னும் இடத்தில் தோன்றுகிறது.<br>2. துணை ஆறுகள்; பவானி, நொய்யல், அமராவதி.<br>3. கர்நாடகா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களை கடந்து வங்கக்கடலில் கலக்கிறது. |

| 13. சணல் ஆலைகள் | சர்க்கரை ஆலைகள் |
|---|---|
| 1. குறைவான விலையில் கிடைக்கக்கூடிய இழைநார்.<br>2. இந்தியா சணல் உற்பத்தியில் உலகில் முதலிடம்.<br>3. சிப்பம், சாக்குபை தயாரிக்கலாம் | 1. பெரும்பாலும் கரும்பிலிருந்து தயாரிக்கப்படுகிறது.<br>2. இந்தியா சர்க்கரை உற்பத்தியில் உலகில் இரண்டாமிடம்.<br>3. கரும்பு சக்கை பேட்டரிதயாரிக்க பயன்படுகிறது |

| 14. மேற்பரப்பு நீர் | நிலத்தடி நீர் |
|---|---|
| 1. ஆற்று வடிநிலம், ஏரிகள், நீர்தேக்கங்கள்<br>2. 95% பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br>3. நீர்வளம் 24,864 மில்லியன் க.மீ. | 1. ஆழ்துளை கிணறு, திறந்த கிணறுகள்<br>2. 80% பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br>3. நீர்வளம் 22,433 மில்லியன் க.மீ |

| 15. தனிநபர் தகவல் தொடர்பு | பொதுத் தகவல் தொடர்பு |
|---|---|
| 1. தனி நபர்களுக்கிடையே தகவல் பரிமாற்றம்.<br>2. பயனாளியிடம் நேரடித் தொடர்பு.<br>3. தந்தி, கைபேசி, தொலைபேசி, மின் அஞ்சல், குருந்தகவல். | 1. ஒரே நேரத்தில் பல லட்சம் தகவல்கள் பெறுவது.<br>2. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு.<br>3. கல்வி,பொழுது போக்கு அம்சங்கள் வழங்கும் வழியாகும். |

| 16. அச்சு ஊடகம் | மின்னனு ஊடகம் |
|---|---|
| 1. அச்சிடப்பட்ட ஆதாரங்கள் (எ.கா) செய்தித்தாள், வார, மாத இதழ்கள்<br>2. எல்லா நேரத்திலும் தகவல் பெறலாம்<br>3. தனது அமைப்பை தக்கவைக்கும்<br>4. அதன் படிவத்தை திரும்ப பெறும். | 1. மின்னனு ஆதாரங்கள் (எ.கா.) வானொலி, தொலைக்காட்சி<br>2. நேரத்திற்கு நேரம் தகவல் மாறும்.<br>3. தனது அமைப்பை மாற்றும்.<br>4. அதன் படிவத்தை திரும்ப பெறாது |

| 17. ராபி பருவம் | காரிஃப் பருவம் |
|---|---|
| 1. வேளாண் பருவம் – அக்டோபர் முதல் மார்ச்.<br>2. கோதுமை, கடுகு, பார்லி,<br>3. குளிர்காலப் பயிர். | 1. வேளாண் பருவம் – ஜீன் முதல் செப்டம்பர்.<br>2. நெல், கம்பு, பருத்தி, சோளம்.<br>3. கோடைகால பயிர். |

| 18. இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|
| 1. வடஇந்தியாவில் பாய்கிறது.<br>2. வற்றாத ஆறுகள்.<br>3. இமயமலையில் உற்பத்தியாகிறது.<br>4. நீர்மின் சக்திக்கு ஏற்றதல்ல | 1. தென் இந்தியாவில் பாய்கிறது.<br>2. வற்றும் ஆறுகள்.<br>3. மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.<br>4. நீர்மின் சக்திக்கு ஏற்றது. |

| 19. வெள்ளபெருக்குக் கால்வாய் | வற்றாத கால்வாய் |
|---|---|
| 1. ஆற்றிருந்து நேரடியாக தடுப்பணையின்றி கால்வாய் மூலம் நீர் எடுத்தல்.<br>2. வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்பலாம்.<br>3. மழைக்காலப் பயன்பாடு. | 1. வற்றாத நதிகளின் குறுக்கே அணைகட்டி நீரின் போக்கை சீர்படுத்தி பயன்படுத்துதல்.<br>2. நீர்பாசனத்திற்கு பயனுள்ளதாக பயன்படுகிறது.<br>3. ஆண்டு முழுவதும் பயன்பாடு. |

| 20 அயன மண்டல பசுமைமாறாத காடுகள் | அயன மண்டல இலையுதிர் காடுகள் |
|---|---|
| 1. ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீ மேல்<br>2. ஆண்டு வெப்பநிலை – 22°c<br>3. ஆண்டு வெப்பநிலை – 70 %<br>4. இலைகள் உதிராது. | 1. ஆண்டு மழைபொழிவு 100–200 செ.மீ வரை<br>2. ஆண்டு வெப்பநிலை – 27°c<br>3. ஆண்டு ஈரப்பதம் – 60–70 %<br>4. கோடையில் இலைகள் உதிரும். |

| 21. உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| 1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுவது.<br>2. உள்ளூர் வணிகம் எனலாம்.<br>3. நிலவழி முக்கிய பங்கு.<br>4. உள்நாட்டு நாணயம் பயன்பாடு | 1. இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட நாடுகளிடையே நடைபெறுவது.<br>2. அயல்நாட்டு வணிகம் எனலாம்.<br>3. நீர்வழி, வான்வழி முக்கிய பங்கு.<br>4. அந்நிய நாட்டு பணம் பயன்பாடு |

| 22.வேளாண்சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|
| 1. வேளாண் பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்துவது.<br>2. தொழிலாளர்களை சார்ந்தது.<br>3. கரும்பு, பருத்தி,சணல் ஆலைகள் | 1. கனிம பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்துவது.<br>2. இயந்திரங்களை சார்ந்தது<br>3. இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd.. BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

## காரணம் கூறு.

### வினா எண் 34 (ஆ).

**1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.**

நாட்டின் 50% வேலைவாய்ப்பும், 25% வருமானமும் வேளாண்மை தருவதால் இது இந்தியாவின் முதுகெலும்பாகும்.

**2. மழை நீர் சேமிப்பு அவசியம்**

நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், விவசாயம், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் மழைநீர் சேமிப்பு அவசியம்.

**3. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன**

புவிமேலோட்டு பேரியக்க விசையின் காரணமாக புவிமேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகள் உருவாகின.

**4. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம் ஏன்?**

வேலை வாய்ப்பு, சுகாதாரம், சிறந்த கல்வி, போக்குவரத்து, பொழுதுபோக்கு போன்ற வசதிகள் பெருநகரங்களில் கிடைப்பதால் மக்கள் தொகை அதிகம்.

**5. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.**

உயரே செல்ல செல்ல வளிமண்டல வெப்பம் குறைவதால் மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிரானது.

**6. தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது.**

தென்மேற்கு பருவக்காற்றின் மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால், தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது.

**7. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப்பாயும் நதிகள்.**

தென்னிந்திய நதிகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்கின்றன.

தென்னிந்தியாவின் நில அமைப்பு மேற்கில் உயரமாகவும், தெற்கில் பள்ளமாகவும் இருப்பதால் தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கி பாய்கின்றன.

**8. இந்தியா அயன மண்டல பருவக்காற்று காலநிலையை பெற்றுள்ளது.**

இந்தியா அயனமண்டல பகுதிகளில் அமைந்துள்ளது. காலநிலையை பருவக்காற்றுகள் நிர்ணயிக்கின்றன எனவே இக்கால நிலையை பெற்றுள்ளது

**9. கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.**

இவை பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளதால் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

**10. விவசாயிகள் இராசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள் ஏன்?**

மத்திய அரசின் விழிப்புணர்வு மற்றும் இயற்கை வேளாண்மையில் (செயற்கை உரங்கள் பூச்சிக் கொல்லிகளுக்கு பதிலாக) மண்புழு உரங்கள், தாவர, விலங்கு கழிவுகள் பயன்படுத்துவதால் விவசாயிகள் மாறுகின்றனர்.

**11. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.**

இமயமலையில் பனி ஆறுகளில் உருவாவதாலும், கோடையில் பனியாறுகள் உருகுவதாலும் இவ்வாறுகள் வற்றாத ஆறுகள்.

## வினா எண் – 28 கட்டாய வினா

*(BOOK INSIDE or BOOK BACK)*

1. உலகின் பிரதான போக்குவரத்து வகைகள் யாவை?
2. புதுபிக்க கூடிய வளங்கள் பற்றி நீவிர் அறிந்ததென்ன?
3. மக்கள் தொகை சீரற்று இருப்பதற்கான சமூக பொருளாதார காரணிகள் யாவை?
4. புவியியல் குறியீடு :– குறிப்பு வரைக
5. மண்வள பாதுகாப்பு மற்றும் மண்வள மேலாண்மையின் முறைகளை குறிப்பிடுக
6. இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்கள் யாவை?
7. இந்தியாவின் அட்ச தீர்க்க பரவலைக் குறிப்பிடுக?
8. கடல் பாதுகாப்பில் சதுப்பு நிலதாவரங்களின் பங்கு குறிப்பிடுக.
9. இமய மலையின் மலைவாழிடங்களின் பெயர்கள எழுதுக.
10. தமிழ் நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு எவ்வாறு மேற்கொள்ளப் படுகிறது?
11. பழங்குடியினர் யார் அவர்கள்,
12. ஒபெக் எவ்வாறு பிறநாடுகளுக்கு உதவி செய்கின்றன?
13. வரி ஏன் விதிக்கப்படுகிறது?
14. வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது?
15. தொழில்மயமாதல் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நன்மைகள் தருகிறது?
16. தொழிற் தொகுப்பு எவ்வாறு தோன்று கிறது?
17. பெர்லின் சுவர் குறிப்பு வரைக?
18. சம்பரான் சத்தியாகிரகம் குறிப்பு வரைக?
19. இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட ராணுவ தளவாடங்கள் யாவை.
20. பனிப்போர் – குறிப்பு வரைக.
21. லேட்டரன் உடன்படிக்கை – வரையறு.
22. கடற்கரை சமவெளி எவ்வாறு உருவாகிறது?
23. சென்னை 'ஆசியாவின் டெட்ராய்டு' என அழைக்கப்படுவதேன்?
24. இந்தியா இடப்பெயர்வு வேளாண்மையின் பல்வேறு பெயர்கள்.
25. இந்தியா அணுக்கோட்பாடு இரண்டு கருத்துக்கள் யாவை.
26. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை பற்றி எழுதுக.
27. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை – வரையறு.
28. மேல்முறையீட்டு நீதிவரையறை – வரையறு.
29. இரண்டாம் துறை – வரையறு.
30. SIPCOT குறிப்பு வரைக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



SAI K THIRUKUMARAN MA.,MSc.,MCom.,MEd.,MBA.,MSW.,MLIS.,HPEd.. BT-SS, GHS – MANALI NEW TOWN, CHENNAI -103. CELL: 9865957299

## வரலாறு 5 மதிப்பெண் வினா–விடைகள்
### (வினா எண் 29 முதல் 33 வரை)

**1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.**

1. 1939–1945 வரைநடைபெற்ற போரில் 24 மில்லியன் இராணுவத்தினரும், 50 மில்லியன் மக்களும் உயிரிழந்தனர்.
2. உலகம் இரு வல்லரசு அணிகளாக அமெரிக்கா தலைமையிலும், சோவியத் யூனியன் தலைமையிலும் பிரிந்தது.
3. இரு வல்லரசு நாடுகளும், உலகில் பல நாடுகளும் அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்தன.
4. பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்கு பொது இடமாக சில பன்னாட்டு முகமைகள் (ஐ.நா.சபை, உலகவங்கி) உருவாகின.
5. காலனி நாடுகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய சூழல் காலனி ஆதிக்க நாடுகள் மாறின.
6. பெண்கள் உழைப்பாளர்களாகவும், பொருளாதார ரீதியாக சுதந்திரம் பெற்றதால் சமூக உறவுகள் மாறின. (திருமணம், குடும்பம்)

**2. பெண்களின் மேம்பாட்டிற்கு 19–ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக?**

1. **இராஜாராம் மோகன்ராய்;**
   உடன்கட்டை (சதி), பலதாரமணம் ஒழிப்பு, விதவை மறுமணம், பெண்கல்வி ஊக்குவிப்பு.
2. **ஈஸ்வர சந்திர வித்யாசாகர்;**
   பெண் கல்விக்கு பெண்கள் பள்ளிகள், விதவை மறுமண ஆதரவு.
3. **கேசவ சந்திர சென்;**
   கிருத்துவ மத சாரம், குழந்தை திருமண எதிர்ப்பு
4. **M.G.ரானடே;**
   விதவை மறுமண சங்கம், சாதி மறுப்பு திருமணம்
5. **சுவாமி தயானந்த சரஸ்வதி;**
   விதவை மறுமண ஆதரவு, குழந்தை திருமண எதிர்ப்பு
6. **ஜோதிபா பூலே;**
   விதவைகள் காப்பகம், குழந்தை திருமண எதிர்ப்பு, உயர்சாதி இந்துக்கள் மறுமண ஆதரவு.

**3. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி?**

1. காந்தியடிகள் 1930ல் தொடங்கிய சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழகத்தில் பல்வேறு ரீதியான மக்கள் கலந்து கொண்டனர்.
2. சென்னையில் கடைகள் முன் மறியலும், அந்நிய பொருட்கள் புறக்கணிப்பும் நடந்தது.
3. ராஜாஜி வேதாரண்யத்தை நோக்கி உப்பு சத்தியாகிரகத்தை தொடங்கினார்.
4. நாமக்கல் கவிஞரின் தேசபக்தி பாடல்களும், பயணித்த பாதை எங்கும் வரவேற்பு கிடைத்தது.
5. உப்பு சட்டத்தை மீறியதால் ராஜாஜி உடன் 12 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.
6. இந்த சட்ட மறுப்பு இயக்கம் சென்னை, ராமேஸ்வரம் தூத்துக்குடி, உவரி மற்றும் பல இடங்களில் நடந்தது.
7. தீரர் சத்தியமூர்த்தி அந்நிய துணிகள் விற்கும் கடைகளை தடை செய்தார்
8. திருப்பூரில் கொடி ஏந்தி போராட்டம் நடத்திய திருப்பூர் குமரன் காவலர்கள் தடியடியால் இறந்தார்.

இவ்வாறு சட்ட மறுப்பு இயக்கம் தமிழகத்தில் மிகப்பெரிய எழுச்சி பெற்றது.

**4. 19–ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்?**

1. 19–ம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூக, சமய சீர்திருத்தங்கள் பல நடைபெற்றன.
2. இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களால் (சமத்துவம்,சுதந்திரம்) கவரப்பட்டனர்.
3. எனவே நம் பண்பாட்டின் குறைகளை நீக்கி பழைய புகழை கொண்டு வர விரும்பினர்
4. நடுத்தர வர்கத்தினரின் மேற்கத்திய கருத்துக்கள், சிந்தனைகள்
5. இந்திய சீர்திருத்தவாதிகளின் இந்திய, மேற்கத்திய பண்பாட்டு இணைக்க முயற்சி.
6. சீர்திருத்த வாதிகளின் கருத்துக்கள் சதி பெண்சிசு கொலை, குழந்தை திருமணம் போன்ற சமூக தீமைகளை கட்டுபடுத்தின.
7. இச்சூழல் 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் உருவாகி நாட்டின் பழம்பெரும் கலாச்சாரத்தை மீட்க விரும்பின

**5. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்? (5 மற்றும் 8 மதிப்பெண் வினா)**

**பெரியாரின் பங்களிப்பு:**

1. சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்
2. பகுத்தறிவுக் கருத்துக்களை பரப்ப குடியரசு, ரிவோல்ட் பகுத்தறிவு, விடுதலை போன்ற பத்திரிக்கைகளை நடத்தினார்.
3. இந்தி மொழி கட்டாயத்தை எதிர்த்து இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தினார்
4. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வைக்கம் போராட்டம்
5. குழந்தை திருமணம், தேவதாசி முறையை, மூட நம்பிக்கைகளை எதிர்த்தார்
6. பெண்களுக்கு சொத்துரிமை, ஆண்–பெண் சமஉரிமை
7. சுய மரியாதை திருமணங்களை நடத்தினார், குருகுலப் பள்ளி சாதிவேறுபாடு எதிர்ப்பு
8. அனைத்து மதத்தினரும் அர்ச்சகர் ஆக வாதிட்டார்.

**6. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமாக சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்?**
(5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

1. 1929ல் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முழு சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
2. இதன்படி வரிகொடா இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் மூலம் வன்முறையின்றி சுதந்திரம் அடைய உறுதிமொழி ஏற்கப்பட்டது.
3. முக்கிய கோரிக்கையாக உப்பு வரியை ரத்து செய்யுமாறு காந்தியடிகள் அரச பிரதிநிதியிடம்அளித்தார்.
4. பதில் அளிக்காததால் சட்ட மறுப்பு இயக்கத்தை தீவிரப்படுத்தினார்.
5. பெண்கள், பல பிரிவு மக்களுடன் தண்டி யாத்திரையை தொடங்கி உப்பு காய்ச்சி தனது எதிர்ப்பை தெரிவித்தார்.
6. ஆனால் காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆதனால் அவரின் புகழ் இந்திய அளவில் உயர்ந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்?**
(5 மற்றும் 8 மதிப்பெண் வினா)

1. வங்கப் பரிவினையால் தோன்றிய சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது
2. அந்நிய பண்டங்கள் புறக்கணித்தல் நடவடிக்கைகள்.
3. பாரதியாரின் தேசபற்று பாடல்களின் எழுச்சி.
4. சுதேசி கருத்துக்களை பரப்ப சுதேசமித்திரன்,இந்தியா போன்ற இதழ்கள் தோன்றின.
5. சுதேசி இயக்கத்தில் மாணவர்கள், இளைஞர்கள் சேர்ந்தனர்.
6. சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை வ.உ.சி தொடங்கினார்.
7. திருநெல்வேலி கலகம் போராட்டத்தை அதிகரித்தது.
8. ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜாஜியும், பெரியாரும் துடிப்புடன் செயல்பட்டனர்.
9. வரிகொடா இயக்கமும், அந்நிய பொருட்கள் புறக்கணிப்பு தமிழகம் முழுவதும் நடந்தது.

**8. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி?**

**1. ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கை, எதிரணி சேர்க்கை;**
மூவர் உடன்படிக்கை – ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி.
மூவர் கூட்டு நாடுகள் – இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா.

**2. வன்முறை சார்ந்த தேசியம்;**
இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி நாடுகளின் தேசபற்றின் வளர்ச்சி.

**3. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை;**
ஜெர்மனியும், இங்கிலாந்தும் கப்பற்படையை விரிவுபடுத்தி போட்டியில் இறங்கியது.

**4. பிரான்சு – ஜெர்மனி பகை;**
பிரான்சு தன் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழந்தது. மொராக்கோவில் இங்கிலாந்து–பிரான்சு ஒப்பந்தத்தை ஜெர்மன் எதிர்த்தது.

**5. பால்கன் பிரச்சனை ;**
பால்கன் பகுதியில் ஆஸ்திரியா–செர்பியா இடையே பகை.

**6. பால்கன் போர்;**
முதல், இரண்டாம் பால்கன் போரில் துருக்கி மற்றும் பல்கேரியா தோற்றது

**7. உடனடிக்காரணம்;**
ஆஸ்திரிய–ஹங்கேரி பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு ஒரு செர்பியனால் கொல்லப்பட்டதே முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணமாக அமைந்தது.

**9. 1905ம் ஆண்டு நிகழ்ந்த வங்காள பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?**

1. மத அடிப்படையில் பிரித்த வங்கப் பிரிவினைமக்களை ஒன்றுபடச் செய்தது.
2. மிதவாதிகள், தீவர வாதிகள் என இரண்டாக போராட்டக் குழு பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டது.
3. மனுக்கள், பொது கூட்டங்கள், செய்தி பிரச்சாரங்கள் மூலம் மக்கள் எதிர்ப்புநடந்தது.
4. அந்நிய பொருட்களை மக்கள் புறக்கணித்தனர்
5. சுதேசி இயக்கக் கொள்கை வங்க மக்களிடம் வேகமாக பரவியது.
6. புறக்கணிப்பும், சுதேசி இயக்கமும் இணைந்தே நடந்தது.
7. 1905 அக்டோபர் 16 பிரிவினை நாள் துக்க நாளாக மாறியது
8. மக்கள் பள்ளி, கல்லூரிகள் புறக்கணிப்பு, நீதிமன்ற அரசு சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

**10. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டு காட்டுக?**

1. ஜெர்மனி இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.
2. ஜெர்மனி படை வீரர்கள் சுருக்கப்பட்டு, சிறிய கப்பற்படை வைக்க அனுமதி.
3. ஆஸ்திரிய–ஜெர்மனி ஒருங்கிணைப்புக்கு தடை.
4. ஜெர்மனியின் காலனி நாடுகளின் உரிமையை நேச நாடுகள் பெற்றன.
5. ஜெர்மனியின் அல்சேஸ், லொரைன் பகுதிகள் பிரான்சிடம் ஒப்படைப்பு.
6. ஜெர்மனியின் டான்சிக் துறைமுகம் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைப்பு.
7. ஆஸ்திரிய சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரித்தல்

**11. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா.சே துங்கின் பங்களிப்பினை அளவிடுக?**

1. 1911–ம்ஆண்டு புரட்சியில் தன் பொதுவுடைமை அரசியல் வாழ்வை துவங்கினார்.
2. 1933–ல் கட்சியின் முழுகட்டுப்பாடு.
3. 1934–ல் பொதுவுடைமை இராணுவத்தினருடன் நீண்ட பயணம்.
4. 1937–ல் ஒரு கோடி மக்களின் தலைவர்.
5. தொழிலாளர்கள், விவசாயிகள் தன்பக்கம் ஈர்த்தார்.
6. 1948–ல் நடுவண் ஆட்சிக்குழு தலைவர்.
7. சீனாவை 5 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்.
8. மாவோவின் தலைமையிலான சீன மக்கள் குடியரசு உலகில் சிறந்த பொதுவுடைமை நாடாக உருவெடுத்தது.

**12. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலையைக் கண்டறியவும்?**

1. முதல் உலகப்போரின் விளைவும், சமூக ஜனநாயகக் கட்சியின் வீழ்ச்சியும் ஹிட்லரின் எழுச்சிக்கும் காரணமாயின.
2. 1919ல் ஹிட்லர் உட்பட 7 பேர் நாசிக் கட்சியை நிறுவினர்.
3. ஹிட்லர் வன்முறைசார் அரசியலை யூதர்களுக்கு எதிராக வளர்த்தார்.
4. தேசிய புரட்சியில் சிறை சென்று தன் அரசியல் சிந்தனை நூலான எனது போராட்டத்தை எழுதினார்.
5. முதலாளிகள் சொத்து உரிமையாளர்களின் ஆதரவால் தவறான வழியில் அதிகாரத்தை கைப்பற்றினார்.
6. பின் 1933–ல் ஹிட்லர் சான்சிலராக பதவியில் அமர தொழிலதிபர்கள், குடியரசுக் கட்சியினர் ஆதரித்தனர்.
7. இவ்வாறு ஹிட்லரின் நாசிக் கட்சி, ஜெர்மனியில் இருந்த பாராளுமன்ற ஜனநாயக கட்சியை முடிவுக்கு கொண்டுவந்தது.

**13. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்?**

1. 1905 கர்சனின் வங்கப்பிரிவினை இந்தியப் பிரிவினைக்கு முதல் காரணம்.
2. 1920ல் மத்திய சட்டபேரவையில் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு என முஸ்லீம் லீக் கோரியது.
3. 1932ல் ராம்சே மெக்டொனல்டு வகுப்புவாத அறிக்கை.
4. 1940ல் முகமது அலி ஜின்னா தனிநாடு கோரிக்கை வைத்தார்.
